TNEB
எம்ப்ளாயீஸ்
பெடரேஷன் நியூஸ்

மலர்-2 ✧ இதழ்-6 ✧ ஜனவரி 2020

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**S. இராமநாதன்**
**K. செல்வராஜு**
**R. ஜெயராமன்**
**வீ. பாரதி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**

39/101, சிங்கண்ண தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com

# அகில இந்திய வேலை நிறுத்தம்! வெற்றி நமதே!!

2020 ஜனவரி 8ம் நாள் அகில இந்திய அளவில் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிரான தாக்குதலை முறியடிக்க தேசம் முழுவதும் தொழிற்சங்கங்கள் திரண்டெழுந்து வேலை நிறுத்தம் செய்து எதிர்ப்பினை பதிவு செய்திருக்கிறது. தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர்கள் 40% அளவில் வேலை நிறுத்தம் செய்துள்ளது பாராட்டத்தக்கது.

கடந்த 38 ஆண்டுகளாக தொழிலாளர் நலனையும், தேசத்தையும் பாதுகாக்க அகில இந்திய அளவில் மத்திய தொழிற்சங்கங்கள் ஒன்று கூடி, வேலை நிறுத்தப் போராட்டங்கள், கருத்தரங்குகள் நடத்தி வருகின்றன. ஆட்சிகள் மாறினாலும், காட்சிகள் மாறுவதில்லை என்பது போல 1981ல் உள்புகுந்த பொருளாதாரக் கொள்கைகள் அதன் பிரதிபலிப்பை தொடர்ந்து முன்னேற்றமான பாதையில் கொண்டு செல்லும் செயலை 2020ல் நிறைவேற்ற துடிக்கிறார்கள்.

உலக மயம், தாராள மயம், தனியார் மயம் இதன் தழுவலே பொதுத்துறைகள் பங்கு விற்பனை. தனியார் மயமாக்கல் தாராளமான செயல்பாடு, தொழிற்சங்க உரிமைகள் பறிப்பு, தொழிலாளர் நலச் சட்டங்கள் திருத்தமும், குறைப்பும்.

குறைந்தபட்ச பொதுத் திட்டமோ, தொழிலாளர் வர்க்கத்திற்கு பாதுகாப்பு அரணோ எதுவாகினும் தொழிலாளர் வர்க்க பொதுவுடைமை கொள்கைகள் கொண்ட உறுப்பினர்கள் போதுமான அளவிற்கு இல்லாத பாராளுமன்றம், பாரினில் தொழிலையும் பாதுகாக்காது, தொழிலாளர் வர்க்கத்தினையும் பாதுகாக்காது என்பதுதான் நிரூபணமாகியுள்ளது.

மின்சார சட்டம் 2003க்கான மசோதா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்த போது வாக்களித்து ஆதரித்த அங்கத்தினர்கள் இன்றும் பாராளுமன்றத்தை அலங்கரிக்கிறார்கள். மின்சார சட்ட திருத்த மசோதா - 2018 - எந்த நிலை எடுக்கிறார்கள் பார்ப்போம்.

உதவி பொறியாளர், கணக்கீட்டாளர், இளநிலை உதவியாளர் (கணக்கு) நேரடி நியமனத்தை வரவேற்போம். அதே நேரத்தில் உதவி வரைவாளர் நேரடி நியமனம் என்னவாயிற்று? 75% பதவிகள் காலியாக உள்ளனவே!

கள உதவியாளர் பதவிகளை நிரப்புவதில் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் கண்டு நிரந்தரம் செய்திட பேச்சு வார்த்தை நடத்திட தாமதம் ஏன்?

ITI படித்தவர்களை நேரடி நியமனம் செய்த அறிவிப்பு கிடப்பில் கிடப்பதின் காரணம் என்ன?

தலைமை அலுவலகத்தில் நிர்வாக பிரிவில் பணியாற்றும் பலருக்கும், பணியாற்றுபவர் களுக்கும் மின் வட்டங்களில் பணியாற்றும் நிர்வாக பிரிவினருக்கும் ஒரே ஊதிய முறையை கடைப்பிடிக்க வேண்டாமா? அடிப்படை பதவி இளநிலை உதவியாளருக்கு பட்டப் படிப்பு படித்திருக்க வேண்டுமென ஒரே கல்வித் தகுதி நிர்ணயித்த பின்பும் ஒரே நிர்வாகத்தில் ஏன் இந்த பாரபட்சம்.

இளநிலை பொறியாளர் 2ம் நிலை முதன்மை பட்டியல் இளநிலை பொறியாளர் 1ம் நிலை பதவி உயர்வு தொடர்பாக விரைவாக பிரத்தியேகமான பேச்சுவார்த்தை தொழிற்சங்கங்களோடு நடத்திடுக!

தைத் திங்களை வரவேற்கும் மனமகிழ்வில் பொங்கலிட்டு வணங்கி வாழ்த்தி பாரம்பரியத்தை காத்திடுவோம்.

மின்சாரத் தொழிலாளர்கள் பெற்ற உரிமைகளை பாதுகாப்பதிலும், மேலும் உரிமை பெறுவதிலும் போராடியும், பேச்சுவார்த்தை நடத்தியும் முன்னேறிச் செல்வோம்!

பேச்சுவார்த்தை என்பது தொழில் நல்லுறவு பேணும் பேராயுதம் என்பதை மின்சார வாரியமும், அரசும் புரிந்து பாரம்பரியத்தை காத்து செயல்படட்டும். லாபமீட்டும் துறையாக மின்துறையை மாற்றிட முன் வரட்டும்.

***- ஆசிரியர்***

**அனைவருக்கும் தைத் திருநாள் நல்வாழ்த்துகள்!**

## உதவி உரைவாளர்கள் நேரடி நியமனம் குறித்து வாரியத்திற்கு நமது கடிதம்

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

ஐயா,

**பொருள்** : உதவி வரைவாளர்கள் (Assistant Draughtsmen) நேரடி நியமனம் குறித்து.

**பார்வை** :
1) **27.12.2018ல் நடைபெற்ற TNBEF மாநில மாநாட்டு தீர்மானம்**
2) **பொதுச்செயலாளர், தமிழ்நாடு மின்சார வாரிய வரைவாளர் சங்கம், கடித நாள்: 16.04.2019**
3) **BP (FP) No. 452 நாள்: 22.08.1983**
4) **எங்களது கடித நாள் 06.12.2019**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அனைத்து பகுதிகளிலும் (Distribution, Generation, Transmission) வரைவாளர்கள் பணி என்பது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

உதவி வரைவாளர், (Asst D'man), வரைவாளர் D'man, முதுநிலை வரைவாளர் Senior D'man முதுநிலை வரைவாளரின் (Head D'man) மற்றும் முதன்மை தலைமை வரைவாளர் (Chief Head D'man) என அனுமதிக்கப்பட்ட பதவிகள் 1030ல் சுமார் 782 பணியிடம் 75% காலியாக உள்ளது.

அடிப்படை பதவியான உதவி வரைவாளர் (Asst D'man) பதவி 259ல் 249 காலியாக உள்ள நிலையில் அடுத்தடுத்த மேல் பதவிகள் காலியாகவே உள்ளன.

75% காலிப் பணியிடங்களின் பணிகளை அந்தந்த பகுதியில் பணியாற்றும் பிற அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் சேர்த்து பார்த்திட வேண்டிய பணிச்சுமையும் ஏற்படுகிறது.

பார்வை (1)ன்படி எங்களது மாநில மாநாட்டில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் உதவி வரைவாளர் பணிக்கு நேரடி நியமனம் செய்திட வேண்டி முன்மொழிந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தக்க மேல் நடவடிக்கைக்காக 28.12.2018 தேதியில் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் உதவி வரைவாளர் நேரடி நியமனம் செய்திட தொடர்ந்து கோரி வருகிறோம்.

தற்சமயம் உதவி பொறியாளர், கணக்கீட்டாளர் மற்றும் இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்வது போல் உதவி வரைவாளர் பதவிக்கும் நேரடி நியமனம் மூலம் எடுக்க நடவடிக்கை வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## ஒப்பந்தத் தொழிலாளர் நிரந்தரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்திட கோரி வாரியத்திற்குக் கடிதம்

பெறுநர்:

**தலைவர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்திடக் கோருதல் - தொடர்பாக.**

**பார்வை : *எங்களது கடித நாள் : 19.10.2019***

பார்வையில கண்டுள்ளபடி மின்சார வாரியத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்வதற்கான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி கடிதம் அளித்திருந்தோம்.

மேற்கண்ட கடிதத்தில் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் காணுவதற்கான வழிமுறைகள் குறித்த எங்களது கருத்துருக்களை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளோம்.

1. **மின்சார வாரியத்தில் 10,000த்திற்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் பணியாற்றி கொண்டிருக்கும் நிலையில் கேங்க்மேன் என்ற புதிய பதவியை உருவாக்கி நேரடி நியமனம் செய்வதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. மேற்கண்ட செயல்பாட்டிற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொழிற்சங்கங்களால் வழக்கு தொடுக்கப்பட்டு நிலுவையிலுள்ளது. இந்நிலையில் உடற்தகுதி தேர்வுக்கான ஆயத்தப் பணிகள் முடிந்து எழுத்துத் தேர்வு நடத்திட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட வண்ணம் உள்ளன. இந்நிலையில் கீழ்க்கண்ட கருத்துகளை தங்களின் கவனத்திற்கும், மேல் நடவடிக்கைக்கும் கொண்டு வருகிறோம்.**
2. **27.09.2019ல் சுமார் 5000க்கு மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் கலந்து கொண்ட கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம் TNEB தலைமை அலுவலகம் பின்புறம் நடைபெற்றதில் முன் வைக்கப்பட்டதை ஏற்று களப்பணி காலியிடங்களை நிரப்பிட ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்திட பேச்சுவார்த்தை நடத்திட வேண்டுகிறோம்.**
   - **i) 5.1.98 என்ற கட்ஆப் தேதியை 10.08.2007 என மாற்றிடல் வேண்டும்.**
   - **ii) தொழிலாளர் ஆய்வாளர் மற்றும் உயர்நீதி மன்றத்தில் நிரந்தரத்திற்கான உத்தரவு பெற்றுள்ள வர்களை நிரந்தரம் செய்திடல் வேண்டும்.**
   - **iii) SE தலைமையில் கமிட்டி அமைத்து ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங் காண வேண்டும்.**
   - **iv) 20.02.2008 சுற்றறிக்கையின்படி அனுப்பாத மின் வட்டங்கள் குறிப்பாக சென்னை (வடக்கு, தெற்கு, மேற்கு, மையம்) மின்திட்டங்கள் போன்று ஏனைய அனுப்பாத திட்டங்களில் உள்ள ஒப்பந்த தொழிலாளர்கள் பட்டியலை கேட்டுப் பெற்று நிரந்தரம் செய்திட வேண்டும்.**
   - **v) 2005 மற்றும் 2006ல் கருணைத் தொகை வழங்கிய போது நிலுவையில் வைத்த 1B பட்டியலில் உள்ள 2000க்கு மேற்பட்டோருக்கு கருணைத் தொகை வழங்கி நிரந்தரம் செய்திடல் வேண்டும்.**

vi) **K2, Chit Agrement-ல் பணி புரிபவர்களுக்கு மின்சார வாரியமே நேரடியாக 22.2.2018 ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள ரூ. 380/- தின ஊதியமாக வழங்க வேண்டும்.**

vii) **2019ம் ஆண்டு அனைத்து ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் கருணைத் தொகை வழங்க வேண்டும்.**

தலைவர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி எங்களது கருத்துருக்களை கவனத்தில் கொண்டு ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்வதற்கு ஆவன செய்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

## கணக்கீட்டாளர் - பதவி உயர்வு - கணக்கீட்டாய்வாளர் - காலமாதம் தவிர்த்திட கோரி வாரியத்திற்கு பெடரேஷனின் கடிதம்

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள்** : **கணக்கீட்டாளர் - பதவி உயர்வு - கணக்கீட்டாய்வாளர் - காலமாதம் தவிர்த்திட வேண்டுதல் - தொடர்பாக...**

**பார்வை** : Letter No. 026947 / 130 / G25 / G252 / 2019 - 2 Dt. 03.05.2019

பார்வையில் கண்டுள்ளபடி 1244 கணக்கீட்டாளர்களுக்கு (Assesor) பதவி உயர்வாக கணக்கீட்டு ஆய்வாளர் (Inspector of Assesment) வழங்கிட தகுதிக்காண் பட்டியல் கோரப்பட்டுள்ளது.

20.03.2019 வரை தகுதியுடையவர்களின் பட்டியலை 31.05.2019க்குள் தலைமைப் பொறியாளர் பணியமைப்பு அலுவலகத்திற்கு அனுப்பிட கேட்டுப் பெற்றும் இதுவரை பதவி உயர்வு உத்தரவு வழங்கப்படாமல் உள்ளது. கணக்கீட்டு பிரிவில் பணியாற்றுபவர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது.

எனவே, தலைவர் அவர்கள் தகுந்த உத்தரவு பிறப்பித்து இம்மாத இறுதிக்குள் டிசம்பர் 2019 பதவி உயர்வு பெற்றிடும் வகையில் விரைந்து நடவடிக்கை எடுத்திட ஆவன செய்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

# சங்கரன்கோவில் செயற்பொறியாளர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி வாரியத்திற்கு கடிதம்

பெறுநர்:

**தலைவர்,**

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,

144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள்** : **திருநெல்வேலி மின்வட்டம் - சங்கரன் கோவில் - செயற்பொறியாளர் - வாரிய விதிமுறைகளை கடைபிடிக்காமை - நடவடிக்கை எடுத்திட கோருதல் தொடர்பாக...**

**பார்வை** :
1. **கு.எண். செ.பொ/வி/சங்/நிபி/நி21/கோஓ/அ.எண்.85/19 நாள் 14.11.2019**
2. **19.11.2019 தேதியிட்ட கடிதங்கள்**
   - **i) திரு. J. தயாள் ஜோசப், இமிபொ II மற்றும்**
   - **ii) திரு. M.G. சுப்பையா, மின்பாதை ஆய்வாளர்**
3. **20.11.2019 தேதியிட்ட திரு. J. தயாள் ஜோசப் கடிதம்**
4. **20.11.2019 தேதியிட்ட TNEB Employees Federation, Regional Secretary கடிதம்**
5. **சம்பள பட்டியல்**

கடந்த 27.06.2017ல் சங்கரர் கோவில் கோட்டம் சங்கரன் கோவில் 110 KV துணை மின் நிலையத்தில் நடந்த விபத்து தொடர்பாக விசாரணை நடைபெற்று திரு. கருப்பசாமி மின்பாதை ஆய்வாளரை பணியிடை நீக்கம் செய்தார்கள்.

பின்னர் மறுவிசாரணை என்ற பெயரில் திரு. J. தயாள் ஜோசப், இளநிலை பொறியாளர் II ம் நிலை மற்றும் M.G. சுப்பையா, மின்பாதை ஆய்வாளர் இருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை முடிந்து பார்வை (1)ல் கண்டுள்ளபடி தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தண்டனை 5 வருடங்களுக்கு ஆண்டுயர்வு (Increment) பின் விளைவுகளுடன் நிறுத்தி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை (2) மற்றும் (3)ன் படி மேற்கண்ட தண்டனை மீது மேல்முறையீடு செய்துள்ளதால் தண்டனையை நிறுத்தி வைக்க கோரியுள்ளார்கள்.

பார்வை (4)ன் படி எங்களது பெடரேஷனின் திருநெல்வேலி மண்டல செயலாளர் மேற்கண்ட விசாரணையும், தண்டனையும் ஒருதலைப்பட்சமாக உள்ளதால் மறுவிசாரணை வேண்டி கடிதம் அளித்துள்ளார்.

சங்கரன் கோவில் செயற்பொறியாளர் அவர்கள் பார்வை (1)ல் அளித்துள்ள தண்டனை ஏற்கனவே பெற்றுள்ள 5 ஆண்டுயர்வை குறைத்து சம்பளம் அளித்துள்ளார்.

வாரிய விதிமுறைகளின்படி எதிர்வரும் ஆண்டுயர்வைதான் நிறுத்த முடியும். ஆனால் செயற்பொறியாளரின் நடவடிக்கை வாரிய விதிமுறையை மீறிய செயலாகும்.

எனவே வாரிய விதிமுறையை கடைப்பிடிக்காது தொழிலாளரின் ஊதியத்தை குறைத்து தண்டனை அளித்து சம்பள பட்டுவாடா செய்த செயற்பொறியாளர் மீது துறைரீதியான தகுந்த நடவடிக்கை எடுத்து தொழில் அமைதி காத்திட வேண்டுகிறோம்.

மேலும், மேற்கண்ட விசாரணை ஒருதலைப்பட்சமாக நடந்துள்ளதால் மேற்கண்ட விபத்து தொடர்பாக மறுவிசாரணை நடத்திட ஆவன செய்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

## கணக்கீட்டாளர் பதவிக்கு நேரடி நியமனத்திற்கு வாரியத்தின் அறிவிப்பு

# தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

## அறிவிப்பு

அறிவிப்பு எண். 01/2020 நாள்: 08.01.2020

1. கணக்கீட்டாளர், பதவிக்கு நேரடி நியமனம் செய்வதற்காக தகுதியுள்ள அனைவரிடமிருந்து கணினி அடிப்படையிலான தேர்விற்கு 10.01.2020 முதல் 10.02.2020 வரை இணையவழி மூலம் மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களும், முன்னாள் இராணுவ வீரர்கள், ஆட்குறைப்பு காரணமாகவும் மற்றும் பல்வேறு காரணங்களால் மூடப்பட்ட அரசுத்துறையில் பணியாற்றி வேலை இழந்த (Retrenched Employees) பணியாளர்களும், கீழ்வரும் காலிப் பணியிடங்களுக்கு இணையவழி மூலமாக விண்ணப்பிக்கலாம்:-

| வ.எண். | பதவியின் பெயர் | காலி பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| 01. | கணக்கீட்டாளர் | 1300 | ஊதிய கட்டு-1 (நிலை-3) ரூ. 19500-62000 |

**2. முக்கிய தேதிகள்:**

| | | | |
|---|---|---|---|
| அ) | அறிவிக்கை நாள் | : | 08.01.2020 |
| ஆ) | விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான ஆரம்ப நாள் | : | 10.01.2020 |
| இ) | விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | : | 10.02.2020 |
| ஈ) | தேர்வு கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாள் | : | 13.02.2020 |
| உ) | தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | : | கணினி அடிப்படையிலான தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேர்வு நடத்தும் அமைப்பு ஆகிய தகவல்கள் www.tangedco.gov.in என்ற இணையதளயத்தில் வெளியிடப்படும். |

**3. தகுதிகள்:**

**(அ) வயது 01.07.2019 அன்று**

| வ. எண் | விண்ணப்பதாரர்களின் இனவகைகள் | குறைந்தபட்ச வயது (முடிவடைந்து இருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது (மிகாமல் இருத்தல் வேண்டும்) |
|---|---|---|---|
| 1. | ஆ.தி., ஆ.தி. (அ), ப.வ. மற்றும் அனைத்து வகுப்பை சார்ந்த ஆதரவற்ற விதவைகள். | 18 வயது | 35 வயது |
| 2. | மி.ப.வ/சீம வகுப்பினர் | 18 வயது | 32 வயது |
| 3. | ஏனையோர் (அதாவது ஆ.தி, ஆதி (அ), ப.வ., மி.ப.வ/சீம ஆகிய வகுப்பினைச் சாராதவர்கள் | 18 வயது | 30 வயது |

(முழு விவரங்கள் www.tangedco.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்)

**(ஆ) கல்வித்தகுதி (அறிவிப்பு வெளியான அன்று உள்ளபடி)**

| வ.எண். | பதவியின் பெயர் | கல்வித்தகுதி |
|---|---|---|
| 01. | கணக்கீட்டாளர் | கலை (அ) அறிவியல் (அ) வணிகவியல் ஆகிய பாடத்தில் இளங்கலை பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் (அளவீட்டு கருவி மூலம் கணக்கீடு செய்வதற்கும் மற்றும் மிதிவண்டி ஓட்டுவதற்கும் தெரிந்திருத்தல் வேண்டும்) |

(i) 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு/டிப்ளமோ தேர்ச்சி பெற்று பின்னர் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுள்ளவர் ஆவார்கள்.

**(இ) தேர்வுக்கட்டணம்:-**

| | |
|---|---|
| முற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்). | ரூ. 1000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) |
| ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்கள்), பழங்குடி வகுப்பினர் | ரூ. 500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) |
| அனைத்து பிரிவினை சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதரவற்ற விதவைகள். | ரூ. 500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) |
| மேலும், ஜி.எஸ்.டி மற்றும் இதர வங்கி சேவைக் கட்டணங்கள் விண்ணப்பதாரரால் செலுத்தப்பட வேண்டும். | |

குறிப்பு :- மேலும் விண்ணப்பிக்கும் முறை மற்றும் தகுதி, தேர்வு தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு www.tangedco.gov.in என்ற இணையத்தை பார்க்கவும்.

**தலைமைப்பொறியாளர்/பணியமைப்பு**

## உதவி பொறியாளர் (மின்னியல் - இநய்திரவியல் - கட்டிடவியல் பதவிக்கு நேரடி நியமனத்திற்கு வாரியத்தின் அறிவிப்பு

## தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

அறிவிப்பு எண். 02/2020 நாள்: 08.01.2020

1. உதவி பொறியாளர்/மின்னியல், உதவி பொறியாளர்/இயந்திரவியல் மற்றும் உதவி பொறியாளர்/கட்டடவியலல் பதவிக்கு நேரடி நியமனம் செய்வதற்காக தகுதியுள்ள அனைவரிடமிருந்து கணினி அடிப்படையான தேர்விற்கு 24.01.2020 முதல் 24.02.2020 வரை இணையவழி மூலம் மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களும், முன்னாள் இராணுவ வீரர்கள், ஆட்குறைப்பு காரணமாகவும் மற்றும் பல்வேறு காரணங்களால் மூடப்பட்ட அரசுத்துறையில் பணியாற்றி வேலை இழந்த பணியாளர்களும், கீழ்வரும் காலிப்பணியிடங்களுக்கு இணையவழி மூலமாக விண்ணப்பிக்கலாம்:-

| வ.எண். | பதவியின் பெயர் | காலி பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| 1. | உதவி பொறியாளர்/மின்னியல் | 400 | ஊதிய கட்டு-1 |
| 2. | உதவி பொறியாளர்/இயந்திரவியல் | 125 | (அதிகாரிகள்) |
| 3. | உதவி பொறியாளர்/கட்டடவியல் | 75 | (Rs. 39800-126500) |

**2. முக்கிய தேதிகள்:**

| | |
|---|---|
| அறிவிக்கை நாள் | 08.01.2020 |
| விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான ஆரம்ப நாள் | 24.01.2020 |
| விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 24.02.2020 |
| தேர்வு கட்டணம் வங்கியில் செலுத்துவதற்கான கடைசி நாள் | 27.02.2020 |
| தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | கணினி அடிப்படையிலான தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேர்வு நடத்தும் அமைப்பு ஆகிய தகவல்கள் www.tangedco.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படும். |

**3. தகுதிகள்:**

**(அ) வயது 01.07.2019 அன்று**

| வ. எண் | விண்ணப்பதாரர்களின் இனவகைகள் | குறைந்தபட்ச வயது (முடிவடைந்து இருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1. | ஆ.தி., ஆ.தி. (அ), ப.வ. மற்றும் ஆதரவற்ற விதவைகள் | 18 வயது | 35 வயது |
| 2. | மி.ப.வ./சீம, பி.வ., பி.வ(மு) | 18 வயது | 32 வயது |
| 3. | ஏனையோர் (அதாவது ஆ.தி., ஆதி (அ), ப.வ., மி.ப.வ/சீம, பி.வ., பி.வ (மு) ஆகிய வகுப்பினைச் சாராதவர்கள்) | 18 வயது | 30 வயது |

**மாற்றுத்திறனாளிகள்:** நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது வரம்புச் சலுகை பெறத் தகுதியுடையவராவார்கள்.

**முன்னாள் இராணுவத்தினருக்கு**

1) ஆதி திராவிடர்/ஆதி திராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர் ஆகிய பிரிவினைச் சார்ந்தவர்களுக்கு 53 வயது வரை சலுகை வழங்கப்படும்.
2) ஆ.தி., ஆ.தி (அ) மற்றும் ப.ப, தவிர ஏனைய வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு 48 வயது வரை சலுகை வழங்கப்படும்.
3) ஏற்கனவே ஏதேனும் ஒரு பிரிவு/பணி/பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர், முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது.

**தொழிற்பழகுனர் பயிற்சி:** தொழிற்பழகுனர் பயிற்சி பயின்ற விண்ணப்பதாரர்களுக்கு பயிற்சி காலத்திற்கு மட்டும் வயது சலுகை வழங்கப்படும்.

(முழு விவரங்கள் www.tangedco.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்)

(ஆ) கல்வித்தகுதி (அறிவிப்பு வெளியான அன்று உள்ளபடி)

நாளிட்ட அறிவிக்கை அன்று விண்ணப்பதாரர்கள் உதவி பொறியாளர்/மின்னியல், உதவி பொறியாளர்/ இயந்திரவியல் மற்றும் உதவி பொறியாளர்/கட்டடவியல் பதவிக்கு கீழ்க்கண்டவாறு கல்வித்தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

| வ.எண். | பதவியின் பெயர் | கல்வித்தகுதி |
|---|---|---|
| 01. | உதவி பொறியாளர்/ மின்னியல், இயந்திரவியல் மற்றும் கட்டடவியல் | A Bachelor degree in Engineering (EEE/ECE/EIE/CSE/IT/Mechanical/ Civil) (OR) A pass in AMIE (Sections A and B) under Electrical/ Mechanical/ Civil Engineering Branch |

(i) 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு/டிப்ளமோ தேர்ச்சி பெற்று பின்னர் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுள்ளவர் ஆவார்கள்.

**(இ) தேர்வுக்கட்டணம்:-**

| | |
|---|---|
| முற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்). | ரூ. 1000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) |
| ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்கள்), பழங்குடி வகுப்பினர் | ரூ. 500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) |
| அனைத்து பிரிவினை சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு. | ரூ. 500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) |
| மேலும், ஜி.எஸ்.டி மற்றும் இதர வங்கி சேவைக் கட்டணங்கள் விண்ணப்பதாரரால் செலுத்தப்பட வேண்டும். | |

குறிப்பு :- மேலும் விண்ணப்பிக்கும் முறை மற்றும் தகுதி, தேர்வு தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு www.tangedco.gov.in என்ற இணையத்தை பார்க்கவும்.

**தலைமைப்பொறியாளர்/பணியமைப்பு**

## இளநிலை உதவியாளர் / கணக்கு பதவிக்கு நேரடி நியமனத்திற்கு வாரியத்தின் அறிவிப்பு

## தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

### அறிவிப்பு

அறிவிப்பு எண். 03/2020 நாள்: 08.01.2020

1. இளநிலை உதவியாளர் / கணக்கு பதவிக்கு நேரடி நியமனம் செய்வதற்காக, தகுதியுள்ள அனைவரிடமிருந்து கணினி அடிப்படையிலான தேர்விற்கு 10.02.2020 முதல் 09.03.2020 வரை இணையவழி மூலம் மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களும், முன்னாள் இராணுவ வீரர்கள், ஆட்குறைப்பு காரணமாகவும் மற்றும் பல்வேறு காரணங்களால் மூடப்பட்ட அரசுத்துறையில் பணியாற்றி வேலை இழந்த (Retrenched Employees) பணியாளயர்களும், கீழ்வரும் காலிப்பணியிடங்களுக்கு இணையவழி மூலமாக விண்ணப்பிக்கலாம்:-

| வ.எண். | பதவியின் பெயர் | காலி பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| 1. | இளநிலை உதவியாளர் (கணக்கு) | 500 | ஊதிய கட்டு-1 (நிலை-3) ரூ. 19500 - 62000 |

**2. முக்கிய தேதிகள்:**

அ) அறிவிக்கை நாள் : 08.01.2020

ஆ) விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான ஆரம்ப நாள் : 10.02.2020

இ) விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் : 09.03.2020

ஈ) தேர்வு கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாள் : 12.03.2020

உ) தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் : கணினி அடிப்படையிலான தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேர்வு நடத்தும் அமைப்பு ஆகிய தகவல்கள் www.tangedco.gov.in என்ற இணையதளயத்தில் வெளியிடப்படும்.

**3. தகுதிகள்:**

**(அ) வயது 01.07.2019 அன்று**

| வ. எண் | விண்ணப்பதாரர்களின் இனவகைகள் | குறைந்தபட்ச வயது முடிவடைந்து இருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1. | ஆ.தி., ஆ.தி. (அ), ப.வ., மி.ப.வ/சீம, பி.வ, ப.வ(மு) மற்றும் அனைத்து வகுப்பைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 18 வயது | வயது வரம்பு இல்லை |
| 2. | ஏனையோர் (அதாவது ஆ.தி., ஆதி (அ), ப.வ., மி.ப.வ/சீம, பி.வ., பி.வ (மு) ஆகிய வகுப்பினைச் சாராதவர்கள்) | 18 வயது | 32 வயது மிகாமல் இருத்தல் வேண்டும் |

(முழு விவரங்கள் www.tangedco.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்)

**(ஆ) கல்வித்தகுதி (அறிவிப்பு வெளியான அன்று உள்ளபடி)**

| வ.எண். | பதவியின் பெயர் | கல்வித்தகுதி |
|---|---|---|
| 01. | இளநிலை உதவியாளர்/கணக்கு | இளங்கலை வணிகவியல் (B.Com) |

(i) 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு/டிப்ளமோ தேர்ச்சி பெற்று பின்னர் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுள்ளவர் ஆவார்கள்.

**(இ) தேர்வுக்கட்டணம்:-**

| | |
|---|---|
| முற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்). | ரூ. 1000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) |
| ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்கள்), பழங்குடி வகுப்பினர் | ரூ. 500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) |
| அனைத்து பிரிவினை சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதரவற்ற விதவைகள். | ரூ. 500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) |
| மேலும், ஜி.எஸ்.டி மற்றும் இதர வங்கி சேவைக் கட்டணங்கள் விண்ணப்பதாரரால் செலுத்தப்பட வேண்டும். | |

குறிப்பு :- மேலும் விண்ணப்பிக்கும் முறை மற்றும் தகுதி, தேர்வு தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு www.tangedco.gov.in என்ற இணையத்தை பார்க்கவும்.

**தலைமைப்பொறியாளர்/பணியமைப்பு**

## கண்ணீர் அஞ்சலி



தொழிற்சங்க மூத்த தலைவர் TNEBEF மாநில உப தலைவரும், திருச்சி பெருநகர் வட்ட செயலாளருமான

**தோழர் K. கஸ்தூரி**

**Foreman TNEB (Rtd)**

அவர்கள் 12.01.2020 ஞாயிற்றுக்கிழமை காலை இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதி சடங்கு 12.01.2020 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் மதுரை ரோடு ராஜீவ் நகர் (DSP ஆபிஸ் செல்லும் வழியில்) உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வருத்தத்துடன்

**தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்**

**திருச்சி பெருநகர் வட்டம்**

## தமிழ்நாடு மின்வாரிய பணி விதிமுறைகள் குறித்து வாரியத்தின் தெளிவுரைகள்

# தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

செயலகக்கிளை
144, அண்ணாசாலை, சென்னை-2

**கடித எண். 34666/அ18/அ181/2019-1 நாள்: 03.12.2019**

அனுப்புநர்

திரு. **வீ. சின்னப்பையன்,** M.A., B.L.,
செயலர்

பெறுநர்

**அனைத்து தலைமைப் பொறியாளர்கள் / அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்,**
**அனைத்து நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்கள்,**
தலைமை உட்தணிக்கை அலுவலர்/தணிக்கைக் கிளை.

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** ***தமிழ்நாடு மின்வாரிய பணி விதிமுறைகள் - விதிமுறை 49-ன் படி முழுக் கூடுதல் பொறுப்பு வழங்கி ஆணை வெளியிடுதல் - சில தெளிவுரைகள் - வெளியிடப்படுகிறது.***

**பார்வை :** **1) (Per) FB TANGEDCO Pro. No. 2 (SB), dt. 25.01.2019**
**2) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (அவி-IV) துறை, தலைமைச் செயலகம், கடித எண். *20940/அவி-IV/20191*, நாள் : *24.06.2019*.**

பார்வை-1ல் காணும் செயல்முறை ஆணையில், ஒரு அலுவலர் ஒரு பதவியைத் தான் முழுக் கூடுதல் பொறுப்பேற்று பணிபுரிய ஆணையிடப்பட வேண்டும் என தமிழ்நாடு மின்வாரிய பணி விதிமுறை 49க்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கூறிய விதிமுறையை மீறி ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை முழுக் கூடுதல் பொறுப்பேற்று பணிபுரிய ஆணை வெளியிடப்பட்டு, முழுக் கூடுதல் பொறுப்புப்படி வழங்கக் கருதும்போது, ஒரு பதவிக்கு மட்டும் கூடுதல் பொறுப்புப்படி வழங்க உத்தேசிக்கப்படுவதாக கருத்துருக்கள் அனுப்பப்படுகின்றன. இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு முழுக்கூடுதல் பொறுப்பேற்க ஆணை வெளியிடுவது தமிழ்நாடு மின்வாரிய பணி விதிமுறை 49க்கு இணக்கமாக இல்லை.

2) எனவே, இனி வரும் காலங்களில் இவ்வாறு ஆணையிடுவதை தவிர்த்து, நிர்வாக காரணங்களை முன்னிட்டு ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை முழுக்கூடுதல் பொறுப்பேற்று பணிபுரிய நேரிடும் போது, ஒரு பதவியை மட்டும் முழுக்கூடுதல் (Full additional charge) பொறுப்பேற்று பணிபுரிய ஆணையிடப்பட வேண்டும் எனவும், மற்ற பதவிகளுக்கு முழு கூடுதல் பொறுப்பு என ஆணையிடப்படாமல், ‘‘பொறுப்பு (incharge)" என ஆணை வெளியிட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனை தவறாது பின்பற்றிட அறிவுறுத்தப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

**(சீ. விஜயகுமார்)**
பிரிவு அலுவலர் செயலருக்காக

# 2019 டிசம்பர் TNEBEF வெளியீட்டில் பிழை திருத்தம்

**(Per.) CMD TANGEDCO**
**Proceedings No. 89, Dated 30.11.2019**
**Chennai EDC / Chengalpattu**

| Posts | Creation | Abolition | Net Creation | Net Abolition |
|---|---|---|---|---|
| Spl. Gr .Foreman | 5 | | 5 | |
| **Foreman I Grade** | **31** | | **31** | |
| Revenue Supervisor | 18 | | 18 | |
| Line Inspector | 24 | | 24 | |
| Technical Assistant | 6 | 1 | 5 | |
| Commercial Inspector | 24 | | 24 | |
| Inspector of Assessment | 33 | | 3 | |
| Commmercial Assistant | 30 | | 30 | |
| Wireman | 124 | 28 | 96 | |
| Fied Assistant/ Wireman | 67 | | 67 | |
| Assessor | 8 | | 81 | |
| Field Assistant | 14 | 2 | 12 | |
| Field Assistant/ Mazdoor | 172 | 6 | 166 | |
| Accounts Supervisor | | 3 | 3 | |
| Comml. Insp./ Comml. Asst. | | 6 | | 6 |
| Telephone Operator/ Comml. Asst. | | 4 | | 4 |
| **TOTAL** | **629** | **50** | **592** | **13** |

## மின் இணைப்பு - பிரிவு அலுவலக குறியீடு எண் - திருநெல்வேலி மண்டலம்

| Section Code | Section Name |
|---|---|
| 097 | Adaikalapattinam |
| 019 | Alankulam / Rural |
| 018 | Alankulam / Town |
| 296 | Alankulam/ Rural |
| 017 | Alankulam/SS |
| 055 | Alwarkurichi |
| 371 | Alwarthirunagari |
| 234 | Amathur |
| 058 | Ambasumudram / Rural |
| 057 | Ambasumudram / Town 1 |
| 133 | Aralvaimozhi |
| 183 | Arumanai |
| 365 | Arumuganeri |
| 211 | Aruppukottai/Rural |
| 201 | Aruppukottai/Town/East |
| 203 | Aruppukottai/Town/North |
| 202 | Aruppukottai/Town/West |
| 286 | Asilapuram |
| 284 | Avarampatti |
| 039 | Avudaiyanur |
| 032 | Ayikudi |
| 132 | Azhagiapandypuram |
| 131 | Boothapandy |
| 285 | Chatrappatti |
| 061 | Cheran Mahadevi |
| 172 | Colachel I |
| 173 | Colachel -II |
| 030 | Courtallam |
| 016 | Devarkulam |
| 292 | Dhalavaipuram |
| 293 | Dhalavaipuram/Rural |
| 249 | Elayirampannai |
| 307 | Eppodum/Vendran |
| 392 | Eral |
| 171 | Eraniel |
| 195 | Eraviputhoorkadai |
| 076 | Ervadi |
| 125 | Ethamozhi |
| 302 | Ettayapuram |

| | |
|---|---|
| 023 | Gangaikondan |
| 062 | Gopalasumudram |
| 074 | Itta Mozhi |
| 001 | Junction |
| 303 | Kadalaiyur |
| 306 | Kadambur |
| 060 | Kadayam |
| 081 | Kadayanallur/Rural |
| 102 | Kadayanallur/South |
| 080 | Kadayanallur/Town |
| 078 | Kalakad / Rural |
| 077 | Kalakad / Town |
| 301 | Kalgumalai |
| 047 | Kalingapatti |
| 184 | Kaliyakkavilai |
| 187 | Kaliyalk |
| 297 | Kallamanaickenpatti |
| 050 | Kallidai Kuruchi |
| 066 | Kallikulam |
| 186 | Kannumamoodu |
| 142 | Kanyakumari |
| 045 | Karivalamvanthanallu |
| 214 | Kariyapatty/North |
| 215 | Kariyapatty/South |
| 192 | Karungal |
| 364 | Kayalpattinam |
| 362 | Kayamozhi |
| 305 | Kayathar |
| 037 | Keelapavur |
| 298 | Keelarajakularaman |
| 146 | Keezha Krishnan Puthur |
| 196 | Killiyoor |
| 193 | Kollencode |
| 067 | Koodan Kulam |
| 276 | Koomapatti |
| 075 | Kottai Karunkuam |
| 143 | Kottaram |
| 321 | Kovilpatti/Rural |
| 311 | Kovilpatti/Town/East |
| 312 | Kovilpatti/Twon/.West |
| 313 | Kovilpatti/North |

| | |
|---|---|
| 289 | Krishnapuram |
| 162 | Kulasekaram/Rural |
| 161 | Kulasekaram/Urban |
| 383 | Kulathur |
| 264 | Kunnoor |
| 042 | Kurukalpatti |
| 366 | Kurumbur |
| 049 | Kuruvikulam |
| 182 | Kuzhithurai |
| 070 | Levenchipuram |
| 003 | Maharajanagar |
| 226 | Mallankinar |
| 268 | Malliputhur |
| 267 | Mamsapuram |
| 174 | Manavalakurichi |
| 052 | Manjolai |
| 014 | Manur |
| 257 | Marketbazar |
| 181 | Marthandam |
| 372 | Meignanapuram |
| 004 | Melapalayam I |
| 005 | Melapalayam II |
| 027 | Moolai Karapatti |
| 063 | Mukkudal |
| 088 | Mullikulam |
| 026 | Munanchi Patti |
| 349 | Muthiapuram/South |
| 209 | Muthuramalingapuram |
| 348 | Muthyapuram/North |
| 145 | Mylady |
| 248 | N.Subbiyahpuram |
| 376 | Naduvakurichi |
| 388 | Nagalapuram |
| 122 | Nagercoil/Town 3 |
| 112 | Nagercoil/Town 4 |
| 123 | Nagercoil/Town 5 |
| 113 | Nagercoil/Town 6 |
| 121 | Nagercoil/Town I |
| 111 | Nagercoil/Town II |
| 084 | Nainaragaram |
| 304 | Nalattinputhur |
| 194 | Namboly |
| 025 | Nanguneri/Rural |
| | |

| | |
|---|---|
| 024 | Nanguneri/Town |
| 370 | Nazereth |
| 347 | North/Rural |
| 013 | North/Rural |
| 353 | Ottanatham |
| 351 | Ottapidaram |
| 314 | Ovilpatti/Town/South |
| 265 | Padaikasuvaithanpatti |
| 375 | Padukkapathu |
| 369 | Palaniappapuram |
| 385 | Palayakayal |
| 210 | Palayampatty |
| 008 | Palayapettai |
| 197 | Palliadi |
| 068 | Panagudi |
| 204 | Pandalgudi |
| 056 | Papanasam |
| 059 | Pappa Kudi |
| 242 | Paraipatty |
| 208 | Paralatchi |
| 363 | Paramankurichi |
| 175 | Paraseri |
| 114 | Parvathypuram |
| 308 | Pasuvanthanai |
| 099 | Pavoorchatram |
| 043 | Pazamkottai |
| 046 | Perumalpatti |
| 002 | Perumalpuram |
| 071 | Perungudi |
| 009 | Petai |
| 381 | Pudukottai |
| 389 | Pudur |
| 354 | Puliampatti |
| 087 | Puliankudi/ Rural |
| 086 | Puliankudi / Town |
| 185 | Puthenchanthai |
| 352 | Puthiamputhur |
| 191 | Puthukadai |
| 065 | Radhapuram |
| 124 | Rajakkamangalam |
| 279 | Rajapalayam/Town/South |
| 282 | Rajapalayam/Town/West |
| 280 | Rajapalayam/Town/East |
| | |

| | |
|---|---|
| 281 | Rajapalayam/Town/North |
| 090 | Rayagiri |
| 093 | Reddiyarpatti |
| 374 | Rural/Udangudi |
| 010 | Samathanapuram |
| 041 | Sankarankovil Town II |
| 044 | Sankarankovil/ Rural |
| 040 | Sankarankovil Town |
| 094 | Santhinagar |
| 368 | Sathankulam/Rural |
| 367 | Sathankulam/Urban |
| 247 | Sattur |
| 246 | Sattur/Rural/East |
| 245 | Sattur/Town |
| 384 | Sawyerpuram |
| 393 | Seidunganallur |
| 288 | Seithur |
| 244 | Sengamalanachiyarpuram |
| 083 | Senthamaram |
| 033 | Shencottai/SS |
| 089 | Sivagiri |
| 103 | Sivagiri/Rural |
| 240 | Sivakasi/SS |
| 237 | Sivakasi/Town/East |
| 239 | Sivakasi/Town/North |
| 238 | Sivakasi/Town/West |
| 229 | Soolakkarai |
| 387 | Soorangudi |
| 391 | Srivaikundam/Rural |
| 390 | Srivaikundam/Urban |
| 266 | Srivilliputhur/Rural/North |
| 269 | Srivilliputhur/Rural/South |
| 259 | Srivilliputhur/Town/East |
| 258 | Srivilliputhur/Twon/West |
| 082 | SS Kadayanallur |
| 092 | SS Puliankudi |
| 141 | Suchindarum |
| 098 | Sundarapandiapuram |
| 275 | Sundarapandiyam |
| 035 | Surandai/SS |
| 036 | Surandi |
| 198 | Suriyacode |
| 095 | Suthamalli |
| | |

| | |
|---|---|
| 029 | Tenkasi/ Town |
| 031 | Tenkasi/Rural |
| 101 | Tenkasi Town II |
| 028 | Tenkasi/SS |
| 007 | Thachanallur |
| 022 | Thalaiyuthu/ Town |
| 096 | Thalaiyuthu/Town II |
| 144 | Thengamputhur |
| 153 | Thickanamcode |
| 207 | Thiruchuli |
| 079 | Thirukurungkudi |
| 163 | Thiruvattar |
| 048 | Thiruvenkatam |
| 073 | Thisaiyan Villai / Rural |
| 072 | Thisaiyan Villai / Town |
| 134 | Thovalai |
| 152 | Thuckalay/ Town II |
| 151 | Thuckalay / Town 1 |
| 233 | Thulukkapatti |
| 361 | Tiruchendur |
| 241 | Tiruthangal |
| 006 | Town/Tirunelveli |
| 350 | Tuticorin/Rural/West |
| 343 | Tuticorin/Urban/East |
| 345 | Tuticorin/Urban/Central |
| 346 | Tuticorin/Urban/Keelur |
| 341 | Tuticorin/Urban/North |
| 342 | Tuticorin/Urban/South |
| 344 | Tuticorin/Urban/West |
| 373 | Udangudi/Urban |
| 020 | Utthumalai |
| 069 | Vadakan Kulam |
| 100 | Vadakarai |
| 287 | Vadakkuvenganalloor |
| 263 | Valayapatti |
| 382 | Vallanadu |
| 064 | Valliyoor |
| 012 | Vannarpet |
| 015 | Vannikonendal |
| 091 | Vasudevanallur |
| 216 | Veeracholan |
| 085 | Veerasigamani |
| 051 | Veeravanallur |
| | |

| | |
|---|---|
| 154 | Veeravanallur |
| 243 | Vempakottai |
| 021 | Venkatespuram |
| 054 | Vickramasingaspuram / SS |
| 053 | Vickramasingaspuram/Town |
| 386 | Vilathikulam |
| 228 | Virudhunagar/Rural/North |
| 227 | Virudhunagar/Rural/South |
| 221 | Virudhunagar/Town/East |
| 220 | Virudhunagar/Town/South |
| 222 | Virudhunagar/Town/West |
| 038 | VK Puthur |
| 011 | VM Chatram |
| 273 | Watrap/East |
| 272 | Watrap/Town |
| 274 | Watrap/West |

## மின் இணைப்பு - பிரிவு அலுவலக குறியீடு எண் - வேலூர் மண்டலம்

| Section Code | Section Name |
|---|---|
| 132 | A. Pallipatty |
| 354 | A.J. Pet/Rural |
| 355 | A.J. Pet/Town |
| 451 | Agramcheti |
| 433 | Alangayam |
| 449 | Alangkuppam |
| 036 | Alapatty |
| 445 | Alinkikuppam |
| 432 | Ambalur |
| 447 | Ambur/ Rural/South |
| 443 | Ambur / SS |
| 441 | Ambur/ Town |
| 442 | Ambur / West |
| 356 | Ammayarkuppam |
| 245 | Ammoor |
| 457 | Anaicut / Rural |
| 456 | Anaicut / Town |
| 284 | Arakonam/Rural/East |
| 283 | Arakonam/Town |
| 285 | Arakonam/Rural/North |
| 286 | Arakonam/Rural/South |
| 184 | Arasampatty |
| 251 | Arcot/Town/East |
| 252 | Arcot/Town/West |
| 295 | Arigalpadi |
| 218 | Ariyur |
| 010 | Athiyamankottai Rural |
| 321 | B.C. Chatram |
| 068 | Bagalur |
| 222 | Bagayam |
| 156 | Bairnatham |
| 276 | Banavaram |
| 373 | Bandikavanoor |
| 189 | Bargur/Rural |
| 188 | Bargur/Town |
| 069 | Berigal |
| 242 | Bhel |
| 157 | Bommidi/North |
| 158 | Bommidi/South |
| 155 | Bommidi Town |
| 216 | Centre |
| 248 | Chakkramallur |
| 153 | Chindalpadi |
| 474 | Chinnavarigam |
| 322 | Damal/O |
| 071 | Denkanikottai North |
| 072 | Denkanikottai South |
| 201 | Dharapadavedu |
| 004 | Dharamapuri/ North |
| 005 | Dharamapuri/ Rural |
| 001 | Dharamapuri/ East |
| 003 | Dharamapuri/Fort |
| 002 | Dharamapuri/West |
| 162 | Doddampatty |
| 453 | East-Odugathur |
| 404 | East-Pudupet |
| 190 | Elathagiri |
| 015 | Eriyur |
| 349 | Erumbi |
| 211 | Gandhi Nagar/ East |
| 213 | Gandhi Nagar / West |
| 131 | Gopinathampatty |

| | |
|---|---|
| 464 | Gudiyattam/East |
| 461 | Gudiyattam/Urban-I |
| 462 | Gudiyattam/Urban-II |
| 291 | Gurvarajet |
| 124 | Hanumantheertham |
| 125 | Harur/East |
| 126 | Harur/Rural |
| 122 | Harur/Rural |
| 121 | Harur/Town |
| 123 | Harur/West |
| 062 | Hosur/Central |
| 070 | Harur/Rural |
| 063 | Hosur/South |
| 061 | Hosur/West |
| 067 | Hosur Sidco |
| 065 | Hosur Spicot I |
| 066 | Hosur Spicot II |
| 007 | Indur |
| 034 | Industrial Estate |
| 326 | Iyyampet |
| 187 | Jagadevi |
| 431 | Jolarpet |
| 348 | K.G. Kandigai |
| 344 | K.K. Chatram |
| 204 | K.V. Kuppam |
| 263 | K. Velur |
| 152 | Kadathur/East |
| 151 | Kadathur/North |
| 223 | Kagithapattarai |
| 260 | Kalavai/East |
| 262 | Kalavai/Town |
